இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 97– திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 01 – சனிக்கிழமை 16 நவம்பர் 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 97 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 01 - Saturday 16 November 2024 - Madurai 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகரில் அரியலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், அரியலூர் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள சிப்காட் ஜெயம்கொண்டம் தொழிற்பூங்காவில், தைவான் நாட்டைச் சேர்ந்த டீன்ஷூஸ் நிறுவனம் 1,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கவுள்ள காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைச் செயலாளர் வி.அருண்ராய், தோல் ஏற்றுமதி கவுன்சில் செயல் இயக்குநர் ஆர்.செல்வம், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் (சிப்காட்) மேலாண்மை இயக்குநர்மருத்துவர் கே.செந்தில்ராஜ், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மரு.பி.அலர்மேல்மங்கை, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, டீன்ஷூஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர்கள் ரிச்சாங் மற்றும் ஓட்டோயாங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அனைவருக்குமான ஆட்சி ‘திராவிட மாடல்’ ஆட்சி!

## அரியலூர் - கொல்லாபுரத்தில் நடந்த அரசு நலத்திட்ட விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !

## ரூ.120 கோடியில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல்!

## ரூ.88 கோடியில் முடிவுற்ற பணிகள் திறப்பு!

## ரூ.174 கோடியில் 21,862 பேருக்கு நலத் திட்ட உதவிகள்!

**அரியலூர், நவ.16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.11.2024) அரியலூரில் நடைபெற்ற அரசு விழாவில், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில்,**

**“அனைவருக்குமான ஆட்சி; இந்த ‘திராவிட மாடல்’ ஆட்சி! என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

கடலாக இருந்து நிலமாகி மனித இனம் தோன்றியதற்கான தடயங்கள் கொண்ட ஊர் இந்த அரியலூர்! அதன் அடையாளமாகத்தான் கல்லங்குறிச்சியில் டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டது. ஒரு காலத்தில், மிக அடர்ந்த வனப்பகுதியாக இருந்து ‘பெரும் புலியூர்’ என்று அழைக்கப்பட்ட பகுதி, இந்த பெரம்பலூர்! இப்படிப்பட்ட வரலாறு கொண்ட அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கான அரசு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

### ஆற்றல் மிக்க அரியலூர்!
### பெரும் பலம் கொண்ட பெரம்பலூர்!

அரியலூர், ஆற்றல் மிக்க மாவட்டமாகவும், பெரம்பலூர் பெரும்பலம் கொண்ட மாவட்டமாகவும் அமைய வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் நோக்கம். அந்த அடிப்படையில்தான் அரியலூர் மாவட்டத்தில் முடிவுற்ற 51 பணிகளைத் திறந்து வைத்திருக்கிறேன். 26 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். 10 ஆயிரத்து 141 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் முடிவுற்ற, 456 பணிகளைத் திறந்து வைத்திருக்கிறேன். 27 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். 11 ஆயிரத்து 721 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

மொத்தமாகச் சொன்னால், 173 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

### ‘அரியலூர் அரிமா’– அமைச்சர் சிவசங்கருக்கு எனது வாழ்த்துகள்! பாராட்டுகள்!

இந்த விழாவை, அரசுப் பெருவிழாவாக ஏற்பாடு செய்திருக்கும் போக்குவரத்துத் துறை அமைச்சர் ‘அரியலூர் அரிமா’ எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களுக்கும், பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தின் ஆட்சியர்களுக்கும், அரசின் அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

இந்த விழாவிற்காக மட்டுமல்ல; இன்னும் பல பாராட்டுகளுக்குத் தகுதியானவர் நம்முடைய சிவசங்கர் அவர்கள்! 2021 மே 7-ஆம் தேதி, ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று பதவியேற்றேன். பதவியேற்று, கோட்டைக்கு வந்து நான் போட்ட முதல் கையெழுத்தே, மகளிருக்கு கட்டணமில்லாத விடியல் பயணத் திட்டத்திற்குதான்! உழைக்கும் மகளிர்க்கு உறுதுணையாகவும், அவர்கள் பொருளாதார ரீதியாக உயர அடித்தளமிடும் திட்டமாகவும் இந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது முதல், மகளிர் தற்போது வரைக்கும் 575 கோடி முறை பயணங்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பெண்களின் சமூகப் பங்களிப்பை அதிகரித்து இருக்கக்கூடிய இந்த மகத்தான திட்டத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகின்றவர்தான், நம்முடைய சிவசங்கர் அவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், பண்டிகைக் காலங்களில் சென்னையிலிருந்து தங்களின் சொந்த ஊர்களுக்கு மக்கள் புறப்படும்போது பேருந்துகள் கிடைக்காமல் நெருக்கடியைச் சந்தித்தார்கள். போதுமான பேருந்துகள் இல்லாமல் கூட்டம் கூட்டமாக பேருந்துகளில் இடம் கிடைக்காமல் சிரமப்பட்டுப் போகும் காட்சியெல்லாம் செய்திகளில் தொடர்ந்து வந்தது. இன்றைக்கு நிலைமை மாறி இருக்கிறது!

### என்னால் வார்ப்பிக்கப்பட்டவர், அமைச்சர் சிவசங்கர்!

சமீபத்தில் தீப ஒளி நாள் விடுமுறைக்கு சென்னையிலிருந்து மக்கள் அவரவர்கள் சொந்த ஊர்களுக்குப் புறப்பட்டபோது, ‘கடைசி பேருந்தும் புறப்பட்ட பிறகுதான் நான் அரியலூருக்குப் புறப்படுவேன்’ என்று போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, அரியலூருக்கு வந்தவர்தான் சிவசங்கர் அவர்கள்! எனவே, அவருடைய பணிகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன்! இதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சியும், பெருமையும் இருக்கிறது. ஏனென்றால், சிவசங்கர் அவர்கள், அரசியலில் எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த அண்ணன் சிவசுப்பிரமணியம் அவர்களுடைய மகன்! என்னால் வார்ப்பிக்கப்பட்ட சிவசங்கர். இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களுக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஏராளமான திட்டங்களை உருவாக்கிக்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## 15,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்!

# ரூ.1000 கோடி மதிப்பில் காலணி தொழிற்சாலை !

## அரியலூர் – ‘சிப்காட்’ வளாகத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**அரியலூர், நவ. 16-**

**ரூ.1,000 கோடி முதலீடு மற்றும் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அரியலூர் மாவட்டம், சிப்காட் ஜெயம்கொண்டம் தொழிற்பூங்காவில் தைவான் நாட்டைச் சேர்ந்த டீன்ஷூஸ் (DeanShoes) நிறுவனம் அமைக்கவுள்ள காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், அரியலூர் மாவட்டத்தில் உள்ள சிப்காட் ஜெயம்கொண்டம் தொழிற்பூங்காவில், தைவான் நாட்டைச் சேர்ந்த டீன்ஷூஸ் நிறுவனம் 1,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கவுள்ள காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், 2030 க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மாற்றம் பெறுவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல் தோல் அல்லாத காலணிகள் துறையில் தமிழ்நாட்டில் 75,000க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், சுமார் 6300 கோடி ரூபாய் முதலீடு இத்துறையில் ஈர்க்கப்பட்டுள்ளது. இதில் பெரும்பான்மையான வேலைவாய்ப்புகள் பெண்களுக்கானவை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, தமிழ்நாட்டில் டீன்ஷூஸ் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. மாநிலத்தில் அனைவரையும் உள்ளடக்கிய சீரான, மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திட தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அம்முயற்சிகளுக்குச் சான்றாக தொழில்ரீதியாக பின்தங்கிய மாவட்டமான அரியலூரில் இத்திட்டம் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### சிப்காட் ஜெயம்கொண்டம் தொழில் பூங்காவில் காலணி உற்பத்தி திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

அரியலூர் மாவட்டம், சிப்காட் ஜெயம்கொண்டம் தொழில் பூங்காவானது, உடையார்பாளையம் தாலுகாவில் ஜெயம்கொண்டம் விருத்தாசலம் சாலையில் அமைந்துள்ளது.

டீன்ஷூஸ் நிறுவனத்திற்கு சிப்காட் ஜெயம்கொண்டம் தொழில் பூங்காவில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்நிறுவனம் தற்போது 1000 கோடி ரூபாய் முதலீட்டில், 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கவுள்ள காலணிகள் உற்பத்தித் தொழிற்சாலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைச் செயலாளர் வி.அருண்ராய், தோல் ஏற்றுமதி கவுன்சில் செயல் இயக்குநர் ஆர்.செல்வம், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் (சிப்காட்) மேலாண்மை இயக்குநர் மருத்துவர் கே.செந்தில்ராஜ், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மரு.பி.அலர்மேல்மங்கை, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, டீன்ஷூஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர்கள் ரிச்சாங் மற்றும் ஓட்டோயாங் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.